இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,354, FEBRUARY 11, 1910.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Notification of By-laws relating to Vehicles, framed by the Municipality of Colombo.]

இதன்கீழ் கண்டிருக்கும், கொழும்பு நகரசங்கத்தாரால் உண்டுபண்ணப்பட்ட துணைப்பிரமாணங்களை மேன்மைதங்கிய தேசாதிபதியவர்கள் மந்திராலோசனைச் சங்கத்தாரின் அநுமதியுடன் 1901 ம் ஆண்டின் 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் திருத்தப்பட்ட பிரகாரம், 1887 ம் ஆண்டின் 7 ம் இலக்க நகரசங்கக் கட்டளைச்சட்டத்தின் 124 ம் பிரிவினால் தனக்குக் கொடுக்கப்பட்ட தத்துவத்தை நிறைவேற்றி உறுதிப்படுத்தினதை 1905 ம் ஆண்டு ஐப்பசி ௴ 20 ந் திகதியின் அரசாட்சியாரின் "கெசெற்" பத்திரிகையில் பிரசித்தப்படுத்தியிருக்கும் துணைப்பிரமாணங்களுக்குச் சேர்க்கவும் சித்தமாகுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேன்மைதங்கிய தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

ஹியூ கிளிபோர்ட்,
கொலோனியல் சக்கிரட்டரி.

கொலோனியல் சக்கிரட்டரியின் கந்தோரில்,
கொழும்பு, 1910 ம் ௵ மாசி ௴ 7 ந் உ.

---

## குறிக்கப்பட்ட துணைப்பிரமாணங்கள்.

1. 1901 ம் ஆண்டின் வண்டில்களைப்பற்றிய கட்டளைச்சட்டத்தின் பெலப்படிக்கொண்டு உத்தரவுச் சீட்டு கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்படாத வண்டில்களிலும் அவைகளை இழுக்கும்படி பாவிக்கப்படுகிற மிருகங்களிலும் பேரால் 1887 ம் ஆண்டின் நகரசங்கக் கட்டளைச்சட்டத்தின் 128 ம் பிரிவினால் கற்பிக்கப்பட்ட வருஷாந்த வரியை ஒவ்வொரு வருஷமும் மாசிமாதம் முதற்திகதிக்குமுன் இறுக்கவேண்டும்.

2. வருஷாந்த வரியைக் கொடுத்ததின்பின் உத்தரவுச்சீட்டு கொடுக்கப்பட்ட வருஷத்தையும் நகரசங்கத்தாரால் வைத்திருக்கிற வண்டில்களின் பதிப்பில் அதற்கிணங்கிய இலக்கத்தையும் காட்டிய இலக்கங்களுடன் "C" என்னும் எழுத்தை அடையாளம்போட்ட தகரத்தகட்டை நகரசங்க தகுந்த உத்தியோகஸ்தர் கொடுக்கவேண்டும்.

வண்டில்கள் அல்லது திரிக்கல் வண்டில்களுக்காக அவ்விததகட்டை கொடுக்குமுன் நகரசங்கத்தின் தகுந்த உத்தியோகஸ்தரவர் அது தகுமென்றெண்ணினால் வண்டில் அல்லது திரிக்கல் வண்டியின் சட்டத்தில் அதற்கு உத்தரவுச்சீட்டு கொடுக்கப்பட்ட வருஷத்தையும் அதின்பதிப்பில் இருந்த இலக்கத்தையும் காணக்கூடிய இடத்தில் குறிக்கும்படி சொந்தக்காரனுக்கு கட்டளை இடலாம்.

3. உத்தரவுச்சீட்டுக் கொடுக்கப்பட்ட யாதொரு வண்டில் அல்லது திரிக்கல் வண்டியின் சொந்தக்காரன் அல்லது பொறுப்பாளி 1901 ம் ஆண்டின் வண்டில்களின் கட்டளைச்சட்டத்தினால் காட்டும்படி கட்டளைபண்ணப்பட்ட தகட்டுடன் இந்தத் துணைப்பிரமாணங்களின் பெயரால் வண்டில்கள் அல்லது திரிக்கல் வண்டில்களின் சட்டத்தில் அறைந்திருக்கும் தகட்டையும் வைக்கவேண்டும்.

4. இந்தத் துணைப்பிரமாணங்களுக்கேற்க யாதொரு வண்டில் அல்லது திரிக்கல் வண்டில்களில் தகுந்த விதமாக இந்தத் துணைப்பிரமாணங்களின் கற்பிக்கப்படுகிறபடி வைக்கப்படாத, அல்லது நகரசங்கத்தின் எல்லைக்குள் பாவிக்கிற வண்டில்களின் சொந்தக்காரன் அல்லது பொறுப்பாளி பத்து ரூபாவுக்கு மேற்படாத அபராதம் ஒவ்வொருவரும் கொடுக்கவேண்டியதாக இருக்கும்.

5. இந்தத் துணைப்பிரமாணங்களுக்கேற்க தகுந்தவிதமாக அறையப்படாமல்வைத்து அல்லது பாவிக்கிற யாதொரு வண்டில் அல்லது திரிக்கல் வண்டிலை நகரசங்க இன்ஸ்பெக்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் மறிக்கக்கூடியதுமல்லாமல் அக்காரணத்தின் நிமித்தம் உடனே அவ்வண்டியின் சொந்தக்காரன் அல்லது பொறுப்பாளியை நகரசங்க அல்லது பொலிஸ் நீதவான்முன் கொண்டுபோகவேண்டும்.

[Notification of By-laws under the Rural Schools Ordinance framed by the District School Committee of Ratnapura, Balangoda, and Rakwana.]

ஆரோக்கியத்துக்குரிய சங்கத்தின் 1906 ம் ஆண்டின் 5 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உற்பிரிவின் தத்துவத்தை அனுசரித்து இரத்தினபுரி டிஸ்திரிக்கைச்சேர்ந்த சிறு கோரளைகளாகிய பலாங்கொடைக்கும் றக்குவானைக்கும் உண்டாக்கிய பின்வரும் உபவிதிகள், அரசாட்சியை நடத்தும் அதிகார மந்திரசபையினது ஆலோசனையுடன் பெலப்படுத்தப்பட்டதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மகோத்தமர் அவர்களினது கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1910 ம் வருட மாசி மீ 4 ந் தேதி.

ஹியூ கிளிவோட்,
இராசாங்க லிகிதர்.

---

## உபவிதிகள்.

1906 ம் ஆண்டின் 5 ம் இலக்கக் கிராமப் பாடசாலைகளைப்பற்றிய கட்டளைச்சட்டத்தின் 7 ம் 8 ம் பிரிவுகளுக் கமைய இரத்தினபுரி டிஸ்திரிக்கின் ஆரோக்கியத்துக்குரிய சங்கத்தால் A இடாப்பில் விபரித்திருக்கும் குறிச்சிகளை ஏற்படுத்தப்பட்ட உபவிதிகள் :—

1. இந்த உபவிதிகளில்—"பையன்" "பொடிச்சி" "பிள்ளை" என்னுஞ் சொற்கள் இங்கே அமைந்திருக்கும் இடாப்பில் விபரித்திருக்கும் குறிச்சியில் வசிக்கும் ஒரு பையனை அல்லது ஒரு பொடிச்சியை அல்லது ஒரு பிள்ளையைக் கருதுகின்றது.

"பெற்றார்" என்பது குழந்தையின் காவலனை அல்லது தாபரிப்பவனைக் கருதும்.

"சட்டம்" என்பது இலங்கைக் காரிக சபையில் அபியுக்தம தேசாதிபதியால் அரசினர் சகாயம்பெறும் பாடசாலைகளுக்கு அக்காலத்துக்கான உத்தரவளித்த சட்டத்தைக் கருதும்.

"வரவு" என்பது சட்டத்தால் விதிக்கப்பட்ட பிரகாரம் வரவிடாப்பில் பதிந்த முழுவரவைக்கொண்டதாய்ச் சட்டத்தாற் கூறப்பட்ட காலத்தின் வரவைக் கருதும்.

"லோக்கல் ஒதோறற்றி" (ஊருக்குரிய அதிகாரம்) என்பது இரத்தினபுரி டிஸ்திரிக்கின் ஆரோக்கியத்துக்குரிய சபையைக் கருதும்.

"பாடசாலை" என்பது இதனுடன் அமைந்திருக்கும் B இடாப்பில் வருத்துரைத்திருக்கும் பாடசாலை ஒன்றைக் கருதும்.

"ஒரு பிள்ளையைப் படிப்பிப்பதற்குப் போதிய தகுதியான வழிவகை" அல்லது "நியாயமான சாட்டு" என்னும் வாக்கியங்கள் 1906 ம் ஆண்டின் கிராமப் பாடசாலைகளைப்பற்றிய கட்டளைச்சட்டத்தின் பிரிவு 8 (1) (b) யிற் கொடுத்திருக்கும் அர்த்தத்தைக் கருதும்.

"பாடசாலைப் பரிக்ஷகர்" என்பது உத்தம தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்டுப் பாடசாலைகளைப் பரிக்ஷிக்கும் பரிக்ஷகரைக் கருதும்.

2. ஆறு வயதுக்குக் குறையாததும் பன்னிரண்டு வயதுக்கு மேற்படாத வயதுள்ள ஒவ்வொரு பையனினதும், பெற்றார் ஆறு வயதுக்குக் குறையாததும் பன்னிரண்டு வயதுக்கு மேற்படாத வயதுள்ள ஒவ்வொரு பொடிச்சியினதும் பெற்றார் அல்லது முகம்மதிய தமிழருடைய பொடிச்சிகளின் பக்ஷத்தில் ஆறு வயதுக்குக் குறையாததும் பத்து வயதுக்கு மேற்படாத வயதுள்ள ஒவ்வொரு பொடிச்சியினதும் பெற்றார் கல்விப்பயிற்சிக்குப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குகள் பண்ணினாலொழிய அல்லது பள்ளிக்கூடத்துக்கு வராதிருக்க நியாயமான மன்னிப்பிருந்தாலொழிய அப்படிப்பட்ட பையனை அல்லது பொடிச்சியை இதோடிணைந்திருக்கும் B இடாப்பில் விபரித்திருக்கும் பள்ளிக்கூடமொன்றில் சேர்ந்துபடிக்கப்பண்ண வேண்டும்.

3. பள்ளிக்கூடத்திற்கு வரும் நேரம்.—சோட்டு வயதுள்ள மற்றப்பிள்ளைகளைப் படிப்பிக்கும் நேரமாம்.

4. இந்த உபவிதியின் ஏற்பாடு யாதொன்றும் :—

(a) 1906 ம் ஆண்டின் கிராமப்பாடசாலைகளைப்பற்றிய கட்டளைச்சட்டத்தின் பிரிவு 9 (2) (d) யின் பிரகாரம மார்க்கவிஷய பாடங்கள் படிப்பிக்கும்போது பிள்ளைகளை வகுப்பிலில்லாமல் போகும்படி யுத்தரவு கொடுக்கத் தடையாகாது.

(b) ஒரு பிள்ளையின் பெற்றார் அனுசரிக்கும் மார்க்கத்தைச்சேர்ந்தவர்களால் அம்மார்க்க வணக்கத்துக்காக முந்துக நியமித்திருக்கும் பெருநாட் தினத்தில் பாடசாலைக்கு வரும்படி அப்பிள்ளையைக் கட்டாயப்படுத்தவும் மாட்டாது.

5. மேலும் லோக்கல் ஒதோறற்றியார் திருப்திக்கு தன்மையாய் பிரயோகிக்கப்பட்டு அக்காலத்துக்கான சட்டத்தால் விதிக்கப்பட்ட சக் தரத்தில் வாசனையிலும், எழுத்திலும், கணக்கிலும் தேர்ச்சிபெற்ற பிள்ளையென்று பாடசாலை பரிக்ஷகரொருவரிடஞ் சேர்டிவிக்கற் என்னும உறுதிப்பத்திரம் பெற்றிருக்கும் 10 ம் 12 ம் வயதுக்கிடையிலுள்ள பிள்ளையைப் பாடசாலைக்கு வரும்படி கட்டாயஞ்செய்யப்பட மாட்டாது.

6. இவ்வுபவிதிகளை அல்லது இதில் எதையேனும் அனுசரியாது அல்லது அசட்டைபண்ணும் அல்லது மீறும் ஒவ்வொரு பெற்றாரும் குற்றவாளியாகிறபோது ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும 20 ரூபாவுக்கு மேற்படாத தண்டனைக்கும் பின்னும் (கட்டளைக்கமையாமல்) குற்றத்தையே தொடர்ந்து செய்து வரும் நாளொன்றிற்கு 10 ரூபாவிற்கு மேற்படாத மேலதிகமான தண்டனைக்கும் உள்ளாவார்.

குறிப்பு.—இந்த உபவிதிகளின் 1 ம் 4 ம் பிரிவுகளில் சுட்டிச்சொல்லிய கிராமப் பாடசாலைகளைப்பற்றிய கட்டளைச்சட்டத்தின் பாகங்கள் பின்வருபவையே :—

பிரிவு 8 (1) (b)—ஒரு தர்ம உதவிக்கொடை பெறுதற்காகப் பிரசித்த வித்தியாகர்த்தரால் பதியப்பட்ட ஓர் பாடசாலைக்கு அல்லது உதவி நன்கொடைக்காக விண்ணப்பப்பத்திரம் ஆலோசனையிலிருக்கும் ஓர் பாடசாலைக்கு அல்லது போதியதும் பொருத்தமுமான கல்விப்பயிற்சி கொடுக்கும் பிரசித்த வித்தியாகர்த்தரால் அனுமதிக்கப்பட்ட ஓர் பாடசாலைக்கு தன் பிள்ளை சமுகம் போய்வருகிறதென்று அத்தாட்சிப்

பண்ணினால், அல்லது பிரசித்தவித்தியாகர்த்தர் போதியதும் பொருத்தமுமானதென்று அதிகாரம்பண்ணக்கூடிய வேறு ஒழுங்குகளைத் தன் பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குச் செய்துவைத்திருக்கிறதாக அத்தாட்சிப் பண்ணினால், அல்லது தன் பிள்ளை பள்ளிக்கூடத்துக்குக் கட்டாயமாகப் போகிறதிலிருந்து விலக்கப்படவேண்டுமென்று பிரசித்த வித்தியாகர்த்தர் அங்கீகாரம்பண்ணிய அதிகாரப்பத்திரமொன்றைக் காட்டினால், தன் பிள்ளையின் கல்விப் பயிற்சிக்காகப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குபண்ணியிருக்கிறதாக எண்ணப்படுவான். ஆனாலும், அப்படிப்பட்ட பிள்ளையைப் பள்ளிக்கூடத்துக்குப் போகப்பண்ணாமலிருக்கிறதற்கான நியாயமான சாட்டுண்டென்று நீதவான் திருப்திக்கு அத்தாட்சிபண்ணினால், அப்படிப்பட்ட பாடசாலைக்குத் தன்பிள்ளையைப் போகவிடாமலிருக்கிறதற்காக எந்தப் பிள்ளையின் தகப்பனும் குற்றவாளியாக்கப்படமாட்டான். ஒரு தந்தை தன் பிள்ளை வியாதியால், அல்லது தவிர்க்கஏலாத காரணத்தால் பள்ளிக்கூடத்திற்குப்போகிறதில் நின்று தடுக்கப்பட்டதாக அத்தாட்சிப் பண்ணினால், தன் பிள்ளையைப் பள்ளிக்கூடத்துக்குப் போகவிடாதிருக்க நியாயமான சாட்டுள்ளவனாக எண்ணப்படுவான்.

பிரிவு 9 (2) லோக்கல் ஒதோறிற்றியார் (ஊருக்குரிய அதிகாரத்தனம்) பின்வரும் விஷயங்களிற் திருப்திப்பட்டாலொழிய, மார்க்கவிஷய பாடங்கள் படிப்பிக்கப்படும் யாதொரு பாடசாலையும் சுதேச பாஷை படிப்பிக்கிறதற்குத் தகுதியான (காரணமான) வழிவகைகள் (பூர்வ நியமம்) செய்யப்பட்ட பாடசாலையென்று, சென்ற மூன்றின பிரிவின் (a) பலமொழித் தொடருக்கமைய வுண்டாக்கின ஒரு உபவிதியினுஞ் சொல்லப்பட மாட்டாது.

(a) மார்க்கவிஷய பாடங்கள், பாடசாலைநேர அட்டவணையில் கண்டிருக்கும் மணித்தியாலங்களில் மாத்திரம் படிப்பிக்கப்படும் ;

(b) மார்க்கவிஷய பாடங்கள் பாடசாலை மார்க்கத்தைச்சேர்ந்த மாணுக்கரைத் தவிர, மற்ற மார்க்கத்தாருக்குப் பெற்ருர் தடைசொன்னால் படிப்பியாதுவிடுவதும் ;

(c) மார்க்கவிஷய பாடங்கள் படியாத பிள்ளைகளை அதற்கென்று நியமித்திருக்கும் நேரத்தில் வேறு பாடங்கள் படிக்க நியமித்து விடுவதும் ;

(d) வேறு மார்க்கத்துப் பிள்ளைகள், மார்க்கவிஷய பாடங்கள் படிப்பிக்கும்போது, படிப்பிக்கும் அறையில் அந்நேர மிருப்பதற்கு அவர்களின் பெற்ருர் தடைசொன்னால், அப்பிள்ளைகளை அந்த மணித்தியாலத்தில் பாடசாலையின் வேறோர் பக்கத்திலிருக்க அல்லது அப்பாடம் படிப்பித்து முடியும்வரைக்கும் பாடசாலையைவிட்டு வெளியேபோய் நிற்கலாமென்று உத்தரவுகொடுப்பதும் ;

(e) இந்தப் பிரிவின் உட்பிரிவு (2) இன் கொப்பி (கொப்பிப்பிரதி) யொன்று இங்கிலீஷ், சிங்களம், தமிழ் என்னும் பாஷைகளில் பாடசாலையில் எல்லாருக்குந் தெரியக்கூடிய முகப்பொன்றில் தூக்கிவைப்பதுமே.

மேலேகண்ட உபவிதிகள் இரத்தினபுரி டிஸ்திறிக்கின் ஆரோக்கியத்துக்குரிய சங்கத்தால் 1909 ம் ஆண்டு மார்கழி மீ 13 ந் தேதி கூடிய கூட்டத்தில் இயற்றப்பட்டன.

(கையொப்பமிட்டது) ஆர். பி. ஹெலிங்ஸ்,
அக்கிராசனர்.

---

## A இடாப்பு.

### மேற்சொல்லிய தணைச்சட்டங்களில் சொல்லிய பலாங்கொடை நகரத்தின் விஸ்தாரம்.

82½ மைபிலிருந்து கொட்டுகொடெல்ல வரையில் நேரான அரசாட்சியின் காத்தைரோட்டு வரைக்கும், அதினின்றும் பெட்டியகல நேரான பழயபாதைவரைக்கும், அதினின்றும் கமல ரோட்டுவரைக்கும் அதினின்றும் தொரவலஓய சந்திப்புவரைக்கும் ; அதினின்றும் றனவின்ன அமரெல ரோட்டு ஆகார்ஸ்லேண்ட் வரைக்கும், அதினின்றும் ஆகார்ஸ்லேண்டின் சந்தியிலிருந்து வெலியாஅவ நாட்டுப்பாதைவரைக்கும் ; இந்தப்பாதையின் சந்திவழியாய் அரசாட்சிரோட்டுடன் 83¼ மைபில்போஸ்ட் ரோமான்கத்தோலிக்கரின் கோயில்வரைக்கும் ; அதினின்றும் காத்தைரோட்டு மத்தியிலிருந்து 30 யார்வரைக்கும் ; அதினின்றும் தொரவலஓயவின் இரும்புப்பாலம் வரைக்கும் ; அதினின்றும் தொரவலஓய குளிக்கிறபிடம் கெக்குனுகாபட்டவல வரைக்கும் அதினின்றும் நேரே மேற்சொல்லிய 82½ மைபில்போஸ்ட் அரசாட்சியின் காத்தைரோட்டு வரைக்கும்.

### மேற்சொல்லிய தணைச்சட்டங்களில் நக்குவாலை நகரத்தின் விஸ்தாரம்.

வடக்கு-4,428 ம் பிரதமபடத்து R 636½ காணித்துண்டின் வடக்கு எல்லையும் ; மேற்கு-4,428 ம் பிரதமபடத்து 636½ ம் காணித்துண்டினதும் 2,744 ம் பிரதமபடத்து J 60 ம் காணித்துண்டின் வடக்கு எல்லையும், அதினின்றும் நக்குவாலை புளுத்தோட்டை சிறியரோட்டிலிருந்து 40 யார் சமமாயும் 7,808 ம் பிரதமபடத்து 482 ம் காணித்துண்டின் நக்குவாலைஓய தெற்கு எல்லையும் ; அதினின்றும் நேராய் 4,428 ம் பிரதமபடத்து R 636½ ம் காணித்துண்டின் கிழக்கு எல்லையும் ; 2,744 ம் பிரதமபடத்து 842 ம் காணித்துண்டின் சந்திமூலையிலிருந்து நக்குவாலை ஓய வடக்கு எல்லையும் ; அதினின்றும் ஓயவின் சந்தியிலிருந்து நேராய் தெற்கு எல்லைவரைக்கும்.

---

## B இடாப்பு.

### பலாங்கொடை சிறுநகரத்துப் பாடசாலையின் இடாப்பு.

1. அரசாட்சியின் பையன்கள் பாடசாலை.
2. அரசாட்சியின் பெண்பிள்ளைகளின் பாடசாலை.
3. ரோமன்கத்தோலிக் கலப்பான் பாடசாலை (சிங்களம்).
4. தமிழ் கூலியினுடன் சங்கத்தின் கலப்பான் பாடசாலை (தமிழ்).

### நக்குவாலைச் சிறுநகரத்தின் பாடசாலையின் இடாப்பு.

1. அரசாட்சியின் கலப்புப் பாடசாலை.
2. தமிழ் கூலியினுடன் சங்கத்தின் கலப்புப் பாடசாலை (தமிழ்).

# LAND SALES.

## காணி விற்பனவுகள்.

No. 587, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிஸில்,
கொழும்பில், 1910 ம் ஆ ஜனவரி 28 ந் உ.

1910 ம் ஆண்டு பங்குனிமாதம் 22 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில் தன் ஆபிஸில், வடமாகாணத்து கவர்ண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், உறுதி முடிவுசெய்யப்படும் அல்லது விற்கப்படும்.

20 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வடமருட்சி மேற்குப்பகுதியிலிருக்கின்றது.

பிளான் இல. 3,460. குறிச்சி—அல்வாய் மேற்கு.

| காணித்துண்டின் இல. | காணிப் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | பெ. | ஏக்கரொன்றுக்கு யானிப்பு விலை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 12818 | ஒழுங்கைத்தெணி | அரசாட்சியார் | தரவை | 0 | 0 | 5 | 15 |
| 12819 | டி. | டி. | டி. | 0 | 0 | 10 | 15 |
| 12820 | டி. | டி. | டி. | 0 | 0 | 5·75 | 15 |
| 12821 | டி. | டி. | டி. | 0 | 0 | 7·50 | 15 |
| 12822 | திட்டாரோடை | டி. | டி. | 0 | 0 | 9 | 15 |
| 12823 | டி. | டி. | டி. | 0 | 0 | 2·50 | 15 |
| 12824 | கறுத்தாம்புலவு | டி. | டி. | 0 | 0 | 4·25 | 15 |
| 12825 | டி. | டி. | டி. | 0 | 0 | 18 | 15 |
| 12826 | டி. | கடற்கரைத்தேவையான நிலம் | டி. | 0 | 0 | 15·50 | — |
| 12827 | மாதுளி | சுந்தையன் பெண் தெய்வானை, வே. கணபதிப்பிள்ளை, கதிர்காமர் பெண் தெய்வானை, வே. கதிர்காமர் | பனைகள் வடலிகள் | 0 | 0 | 33 | 16 |
| 12828 | தொழுக்குறாவளைத்தெணி | வயிரமுத்து பெண் செல்லமுத்து | பனைகள் | 0 | 0 | 14·50 | 16 |
| 12829 | டி. | அரசாட்சியார் | தரவை | 0 | 0 | 24 | 15 |
| 12830 | டி. | வே. சின்னத்தம்பியும் வே. சின்னப்பிள்ளையும் | பனைகள் வடலிகள் | 0 | 0 | 7·50 | 16 |
| 12831 | சாளம்பைதாவடி | கந்தர் கதிர்காமர், கணபதியார் பெண் வள்ளியார், சின்னத்தங்கம் | டி. | 0 | 0 | 17·25 | 40 |
| 12832 | டி. | எஸ். சண்முகம் சுப்பாத்தை, வே. கணபதிப்பிள்ளை பத்தினி | டி. | 0 | 0 | 30·50 | 16 |
| 12833 | வதராடலை | டி. | டி. | 0 | 0 | 18·25 | 16 |
| 12834 | டி. | அரசாட்சியார் | தரவை | 0 | 1 | 2 | 15 |
| 12835 | காத்தைத்தெணி | டி. | டி. | 0 | 0 | 39 | 15 |
| 12836 | கொம்வாய்தெணி | ஆ. சின்னக்குட்டியும் க. வயிரமுத்துவும் | வடலிக்காணி | 0 | 0 | 26·25 | 16 |
| 12837 | நிட்டுவான்தெணி | க. கந்தவனம், வயிரமுத்து பெண் செல்லமுத்து, ஆ. கணபதியார் | டி. | 0 | 1 | 7 | 16 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் கவர்ண்மேந்து ஏசன்றிடத்திலும் பட்டினப்பகுதி அளவுக்கந்தோர் தலைவரிடத்திலுமிருந் தறிந்துகொள்ளலாம்.

மகோத்தம தவர்களின் கட்டளைப்படி,

ஹியூ கிளிவோர்ட்,
கொலோனியல் சக்கிறத்தர்.

---

No. 1,227, E. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிஸில்,
கொழும்பில், 1910 ம் ஆ மார்ச் 7 ந் உ.

1910 ம் ஆண்டு பங்குனிமாதம் 30 ந் திகதியாகிய புதன் கிழமை, பிற்பகல் ஒரு மணிக்கு கிழக்கு மாகாணத்து கவர்ண்மேந்து ஏசன்றவர்கள் தன் ஆபிஸில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்பார்.

காணித்துண்டுகள், கிழக்குமாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றன.

பிளான் இல. 4,123. கோறளைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரரின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | பெ. | தீர்ப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 94944 | நாசுவன்தீவு | ச. கணபதிப்பிள்ளை | தென்னைக்கேற்ற காடு | 10 | 1 | 13 | 20 | 0 |
| 94945 | டி. | — | ஒதுக்காக விடப்பட்ட பூமி | 2 | 0 | 4 | — | |
| | | பிளான் 4,124. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | | |
| 94946 | நாசுவன்தீவு | உ. அகமதுலெவ்வை | தென்னைக்கேற்ற காடு | 9 | 3 | 17 | 18 | 0 |
| 94947 | டி. | பொதுவிற்பனை | டி. | 3 | 2 | 15 | 18 | 0 |
| 94948 | டி. | — | ஒதுக்காக விடப்பட்ட பூமி | 5 | 2 | 14 | — | |
| 94949 | டி. | இ. சின்னன் | தென்னந்தோட்டம் | 5 | 1 | 37 | 16 | 0 |
| 94950 | டி. | உ. அகமதுலெவ்வை | தென்னைக்கேற்ற காடு | 7 | 2 | 39 | 18 | 0 |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | ரூ. | பே. | தீர்ப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | படம் 4,073. உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | | | | |
| 94738 | தாயான்காணித் துண்டிகுடி | க. கண்ணப்பன் | வேளாண்மைப்பூமி | 1 | 3 | 2 | 30 | 0 |
| | | படம் 4,112. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | | |
| 94913 | பிரான் | யோ. க. கனகரெட்ணம் | தென்னைக்கேற்ற காடு | 2 | 3 | 10 | 15 | 0 |
| | | படம் 929. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | | |
| 11486 | வாளச்சேனை | தே. வி. அருதம்பி | காடு | 1 | 3 | 34 | 18 | 0 |
| 11487 | டிை. | டிை. | காடு | 1 | 2 | 38 | 18 | 0 |
| 11488 | டிை. | டிை. | காடு | 1 | 3 | 28 | 18 | 0 |
| 11489 | டிை. | டிை. | காடு | 1 | 3 | 22 | 18 | 0 |
| 11490 | டிை. | டிை. | காடு | 1 | 3 | 19 | 18 | 0 |
| | | படம் 3,815, மண்முனைப்பற்று தென்பகுதி. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | | |
| 93723 | அம்பிளாந்துறை | வ. வி. இளையதம்பியு மற்பேரும் | வேளாண்மைக்கேற்ற பூமி | 8 | 3 | 3 | 15 | 0 |
| 93724 | டிை. | வ. வி. சின்னத்தம்பிப்போடியு மறுபேரும் | டிை. | 10 | 1 | 30 | 15 | 0 |
| 93725 | டிை. | பொ. த. நல்லதம்பிப்போடியு மறுபேரும் | டிை. | 16 | 3 | 30 | 15 | 0 |
| 93726 | டிை. | த. தோ. நல்லதம்பிப்போடியு மறுபேரும் | டிை. | 16 | 2 | 14 | 15 | 0 |
| 93727 | டிை. | மு. குமரப்போடியு மறுபேரும் | டிை. | 9 | 3 | 17 | 15 | 0 |
| 93728 | டிை. | பொ. த. நல்லதம்பிப்போடியு மறுபேரும் | டிை. | 10 | 2 | 28 | 15 | 0 |
| 93730 | டிை. | அ. த. சின்னதம்பிப்போடியு மறுபேரும் | டிை. | 16 | 2 | 30 | 15 | 0 |
| 93731 | டிை. | வ. வி. சின்னத்தம்பிப்போடியு மறுபேரும் | டிை. | 4 | 3 | 21 | 15 | 0 |
| *93733 | டிை. | டிை. | டிை. | 109 | 2 | 0 | 15 | 0 |
| | | படம் 4,039. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | | |
| 94634 | புளுகுநாவி | உ. காசின்வாவாப்போடி | காடு | 4 | 0 | 25 | 15 | 0 |
| 94635 | டிை. | டிை. | வயல் | 2 | 0 | 16 | 15 | 0 |
| | | படம் 4,102. உரித்தாளி—முடிக்குரிய | | | | | | |
| 94899 | முனைக்காடு | க. ஆறுமுகம் | தோட்டச்செய்கைக்கேற்றகாடு | 1 | 0 | 12 | 15 | 0 |
| | | படம் 2,377. எருவூர்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | | |
| 76142 | வந்தாறுமூலை | தோ. கு. சின்னத்தம்பி | பறட்டைக்காடு | 18 | 0 | 24 | 17 | 50 |

*3,815 ம் இலக்கப்படத்திற் காணப்படும் 93,733 ம் இலக்கக் கண்டம் அம்பிளாந்துறை தெவிளாமுனை ரேட்டுக்கு வடக்கே ஏறக்குறைய ஒரு மைல்தூரத்தி லிருக்கின்றது.

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்தீசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றத்துரை அவர்களிடம் வினவி யறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,
ஹியூ க்ளிவோர்ட்,
இராசாங்க [illegible]

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Hambantota S. O. 11—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஞு மாசி(பெப்ருவரி)மீ 11 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. ஜீ. பெரேரா துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டேனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவைகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஜீ. பெரேரா,
விசேஷ உத்தியோகத்தர்.

---

கட்டிய காணிகளின் விவரம்.

தென்மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்குக் கிறவாப்பத்துக் கிழக்கைச்சேர்ந்த மூல்லெல ஊன்றுங் கிராமத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 453.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|
| 2 ... | கெகிரிலந்த, கொடவாவேகொறட்டுவே, தெபறகாயாய, கியம்பலகாயாய, கொடவாவேயேன, வெவகாவயேன, வீறகெற்றிவலேயாய, வெலிவலேயாய, எற்றம்பகாயாய, கின்குறவெலகொறட்டுவே, மூலனபெத்த, கியம்பலகாகொறட்டுவேயேன, கெலம்பஆதேயேன, இங்கினியன்காக்கொறட்டுவே, அம்பலமகாவயேன ... | 2169 [illegible] [illegible] |

* இவ்வீசின் நான்காம் பாகம் 209 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்கவும்.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | பே. |
|---|---|---|---|---|
| 2a | வறுயாய | 7 | 3 | 19 |
| 2b | புஞ்சிவீரவலகெத்தியாய | 13 | 0 | 25 |
| 2c | மகாவீறகெத்திமவலயாய | 10 | 1 | 30 |
| 2d | உல்கெத்தேயாய | 34 | 0 | 30 |
| 2e | வெலங்காயாய | 6 | 1 | 5 |
| 2f | வெவிவலயாய | 36 | 1 | 0 |
| 2g | ஷை | 13 | 1 | 19 |
| 5 | சியம்பலகட்டுவேஒழுக்கலான, கச்சிகலஞறஅத்தஒழுக்கலான, பிஞ்கும்புரேவல | 73 | 3 | 28 |
| 7 | மீன்ஆறவெவ | 5 | 2 | 15 |
| 7a | மீன்ஆறேவெவகாவஒழுக்கலான | 2 | 3 | 11 |
| 8 | மூலெனமாவெவ | 14 | 2 | 21 |
| 19 | சியம்பலகட்டுவெவ | 3 | 1 | 0 |
| 20 | சியம்பலகட்டுவேவெல | 3 | 2 | 16 |
| 21 | மூலனவெவ | 26 | 1 | 26 |
| 22 | மகாவெவேபெத்த | 28 | 0 | 23 |
| | | 2,449 | 0 | 32 |

எல்லைகளாவன: வடக்கு-கெதகெத்தியக் கிராம எல்லை, ஆச்சாரியகமக் கிராமஎல்லை, நிக்கவக் கிராமஎல்லை, கந்தங்கட்டுவக் கிராமஎல்லை, எத்பட்டுவக் கிராமஎல்லை; கிழக்கு-எத்பட்டுவக் கிராமஎல்லை, மெதகேவியக் கிராமஎல்லை; தெற்கு-உடகஆகெத்தியக் கிராமஎல்லை; மேற்கு-கொட்டவாயக் கிராமஎல்லை, யக்காகலக் கிராமஎல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக் குட்பட்டவையாய் மேற்குறிக்கக் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 126 ஏக்கர் 2 ரூட் 39 பேர்ச்சும் முன்குறித்த 2,449 ஏக்கர் 32 பேர்ச்சுக்குள் அடங்கவில்லை யென்பதையும் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 463.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | பே. |
|---|---|---|---|---|
| 1 | புன்காக்கும்புற இலகாலை, புன்காக்கும்புற பகலகாலை | 7 | 2 | 34 |
| 3 | பின்பங்குவ, மெதகும்புற, கொங்காஇந்திகொந்த, கொடகாலை, புஞ்சிமெதகாலை, கறங்காகும்புற, எகொடபங்குவ, கலகிலகாகும்புற, மயிலகாக்கும்புற, பதகாமூலன | 27 | 2 | 13 |
| 4 | பாஜுவத்தை அல்லது மகாவத்தை, போகாகொடெல்ல, போகாவத்தை, கொடெல்வெலவத்தை, பிற்றகொறட்டுவ, தனுவெறவியாவத்தை, தெபுறாவத்தை, கலகாவவத்தை, குறியகாவத்தை, மல்த்தக்காவத்தை, மெதவத்தை, இகலவத்தை, தேவாலேவத்தை, மயிலகாவத்தை, சியம்பலகாவத்தை, வெங்காவவத்தை, கோங்காவத்தை | 12 | 0 | 15 |
| 6 | தன்அத்தேவலேகெலே, தங்காஆதேவவேறும்புற (201,232 ம் 199,167 ம் 199,166 ம் உரிமைப்பட்டங்களில் கண்டிருக்கும் காணிகள்) | 55 | 2 | 24 |
| 9 | மகாவெவ, உடதறண்ட முதலியன (200,159 ம் 190,777 ம் உரிமைப்பட்டங்களில் கண்டிருக்கும் காணிகள்) | 28 | 0 | 22 |
| 10 | மூலனேமகாவெவகும்புற | 0 | 0 | 18 |
| 11 | ஷை | 0 | 0 | 8 |
| 12 | ஷை | 0 | 0 | 13 |
| 13 | ஷை | 0 | 0 | 20 |
| 14 | ஷை | 0 | 0 | 4 |
| 15 | ஷை | 0 | 0 | 16 |
| 16 | ஷை | 0 | 0 | 3 |
| 17 | ஷை | 0 | 0 | 6 |
| 18 | ஷை | 0 | 0 | 3 |
| | | 126 | 2 | 39 |

3,697

---

[Hambantota S. O. 12—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவற்றிலேனும் எவ்வித உடைமையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) ௴ 11 ந் தேதி தொடக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் சப்பிரகமுவ விசேஷ உத்தியோகத்தர் எவ். அபின்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடைமையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவைகளை முடிக்குரிய குடைமையென தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எவ். அபின்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சட்டிய காணிகளின் விவரம்.

தென்மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திரிக்கு மேலைப்பத்து மேற்கைச்சேர்ந்த பலகுருவல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடன் சேர்க்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, மேற்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 365.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | பே. |
|---|---|---|---|---|
| 1 | கோங்காயேன, வெல்லயேன, வெவயேன, புல்காயேன | 325 | 1 | 16 |
| 5 | பலகுருவலவெவ அல்லது பதுகாவெவ | 6 | 1 | 33 |
| | | 331 | 3 | 9 |

* இவ்விதழின் தமிழ்ப் பகுதி 212 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

எல்லைகளாவன : வடக்கு-இகலகுருவலக் கிராமஎல்லை, ஏ. ஈ. விஜேசிங்க உரித்துப்பேசும் தியன்காவத்தே கெபெல்ல மேற்படியார் உரித்துப்பேசும் அலுத்வத்தை, தொன் சொத்தன் அபேசேகெற விஜேசுந்தரவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் புன்காவத்தை, இகலகுருவலக் கிராமஎல்லை, விதானகந்தச்சிகே தொன்ஜோ குடியிருக்கும் வெவஹில்லேவத்தை, இகலகுருவலக் கிராம எல்லை ; கிழக்கு-தந்தேனிகமக் கிராமஎல்லை, துப்பர்கிகமக் கிராமஎல்லை; தெற்கு-துப்பாகிகமக் கிராமஎல்லை,வீரகஸ்வெவக்கிராமஎல்லை; மேற்கு-யாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரிய தெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட கோங்காயேன, துன்கேஆறக் கிராமஎல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 15 ஏக்கர் 1 றூட் 23 பேர்ச்சும் முன்குறித்த 331 ஏக்கர் 3 றூட் 9 பேர்ச்சுக்குள் அடங்கவில்லை என்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 365.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 1b | வெலகாவத்தேகெபெல்ல | 0 1 38 |
| 1c | வெலகாவத்தை | 0 1 21 |
| 1f | கிரம்பாவத்தை | 0 3 24 |
| 4 | ஹாலொங்காவத்தை | 0 3 34 |
| 6 | கொடெல்லேவத்தை | 2 2 27 |
| 6a | டிை. | 1 2 15 |
| 7 | பகலகுருவலவெல | 7 1 10 |
| 8 | கோங்காவத்தை | 1 0 14 |
| | | 15 1 23 |

3,698

[Ratnapura S. O. 4—1910.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஞு மாசி (பெப்ருவரி)மீ 11 ந் தேதி அவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. ஜீ. பெரேரா துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஜீ. பெரேரா,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணியின் விவரம்.

சப்பிரகாமமாகாணம் ரத்தினபுரி டிஸ்திரிக்கு நாவதுன் கோறளையைச்சேர்ந்த கிரிபத்கல என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே 367 ஏக்கர் 2 றூட் 33 பேர்ச் விசாலமுடையதும் சாமானியமாய் கிரிபத்கலஹுக்கலான என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதும் 26 ம் பிரதமபடத்தில் 1 ந் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி, இதற்கெல்லைகளாவன : வடக்கு-புஹுன்கல என்னும் நீரோடை, போபிற்றியக் கிராமஎல்லை ; கிழக்கு-கந்துருகந்தக் கிராமஎல்லை, கோங்காதொல ஆறு ; தெற்கு-கந்தவகம்புறெகேபடபிஸ்ச உரித்துப்பேசும் றம்படபஸ்வத்தேகென்யாய, கெற்றிகே அல்விசாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பில்லகாவேயென, மேற்படியார் உரித்துப்பேசும் கல்லெனலயென, பீ. டீ. ஜீ. கிளார்க்கும் பஞ்சாலிகளும் உரித்துப்பேசும் கிரிபத்கலதோட்டம், ஜீ. றத்திறங்காமி உரித்துப்பேசும் றிகில்லேபொலயென, கமகே அஞ்ஞியாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் உடயாவெனிய, கமகே புஞ்சிமகாத்மயா உரித்துப்பேசும் இபன்வலத்தேகென்யாய, மேற்படியார் உரித்துப்பேசும் வறககாவயென, மேற்படியார் உரித்துப்பேசும் வறககஸ்தென்னேயென, மேற்படியார் உரித்துப்பேசும் பில்லகாவயென ; மேற்கு-எறபத்தே கிராமஎல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக் குட்பட்டதாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டு இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், அதின் விசாலத்தொகையாகும் 2 ஏக்கர் 17 பேர்ச்சும் முன்குறித்த 367 ஏக்கர் 2 றூட் 33 பேர்ச்சுக்குள் அடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

பிரதம படம் 26.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 1a | கந்தேவத்தை | 2 0 17 |

* இங்கிலீசின் நான்காம் பாகம் 214 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

3,699

---

[Tender for supplying Carts to the Civil Medical Stores, Colombo.]

கொழும்பு சிவில் மெடிக்கல் ஸ்ரோருக்கு ஒரு வருஷம் அதாவது 1910 ம் ஆண்டு ஜுலைமீ 1 ந் தேதி அவக்கம் 1911 ம் ஆண்டு ஜுனிமீ 30 ந் தேதி வரைக்குஞ் சாமான்கள் ஏற்றுமதிசெய்வதற்கு தேவையான வண்டிகள் விட்டு ஒப்பந்தஞ்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திறுத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு பிரதிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "கொந்திறுத்து ஒப்பந்த விசாரணைச்சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல்வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேன்மூலையில் "[illegible] கள் ஸ்ரோறுக்கு வண்டிவிடுகிறதற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுத வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1910 ம் ௵ மார்ச் ௴ 15 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரவேண்டும்.

5. அச்சிட்ட கொந்திறாத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படி செய்யாத்தவறினால், கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணம் ரூபா 50 கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரவேண்டும். கொந்திறாத்துக் கேள்விகள் எழுதி அனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திறாத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்கப்படும். கொந்திறாத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திறாத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திறாத்து ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்போரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ன்மேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விவரங்களைப் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஆஸ்பத்திரிகளாவன.

| | | | |
|---|---|---|---|
| டிப்புலா | ஆஸ்பத்திரி | ராகம | ஆஸ்பத்திரி |
| கம்பளை | டிெ | களுத்துறை | டிெ |
| அப்புத்தளை | டிெ | காலி | டிெ |
| மதுரட்டை | டிெ | | |

(கையொப்பம்) ஜே. ரீ. கிரின்லின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசருக்காக.

கொழும்பு, 1910 ம் ௵ ஜனவரி (தை)௴ 21 ந் தேதி.

---

[Tenders for Fence Repairs of Salt Pans, Chiviyateru, Jaffna.]

சிவியாதெரு வேலி பழுதுபார்ப்பதற்கு கேள்விப் பத்திரம்.

1. இத்தால் சகலருமறியவும் சிவியாதெரு உப்பளத்தில் வேலி பழுதுபார்த்துக் கொடுக்க விரும்புவோர்கள் கேள்விப்பத்திரம் அனுப்பலாம்.

2. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இரண்டுபிரதிகளாக எழுதி ஒரு உறையில் வைத்து ஒட்டி முத்திரை வைத்து வடமாகாண ஏசண்டுத்துரைக்கு என்று மேல்விலாசம் போட்டிருக்கவேணும்.

3. சிவியாதெரு உப்பளம் வேலி பழுதுபார்க்கக் கேட்கும் கேள்விப்பத்திரமென்று உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுதவேண்டும். 1910 ம் ௵ மார்ச் 15 ந் தேதி மத்தியானத்துக்குமுன் கவண்மேந்து ஏசன்றர் கந்தோரில் சேரவேண்டியது.

4. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடதாசியில் எழுதவேணும். அக்கடதாசிகளை யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அப்படியான கடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. கேள்விப்பத்திரக் கடதாசிகள் பெற விரும்புவோர் கச்சேரியில் ரூபா 25 கட்டி பற்றுச்சீட்டைக் காட்டினால் அந்தக்கடதாசிகள் கிடைக்கும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவண்மேந்து ஏசண்டினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டு பத்து நாளைக்குள்ளாக போதிய பிணை கொடுக்கத்தவறினால், அதை ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்தால் கட்டப்பட்ட காசு பறிமுதலாக்கப்படும். மற்றக் காசுகள் ஒப்பந்தம் எழுதி முடிந்தவுடன் அவர் அவருக்குத் திரும்பிக் கொடுக்கப்படும்.

6. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான பேர்வழிகள் பிணைநிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அனுப்பியிருக்க வேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்கவேணும்

7. கேள்விக்காரர் எவ்வளவு காலத்துக்குள் வேலையை ஒப்பேற்றி முடிப்பாரென்று காட்டவேணும். பாவிக்கப்படும் சாமான்கள் எல்லாம் கவண்மேந்து ஏசண்டினால் நியமிக்கப்படும் ஒருவரால் நல்லதென்று ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இருக்கவேணும்.

8. ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணை உறுதியிற் சேரவேணும். பிணை உறுதித் தொகை முதலிய விபரங்கள் எல்லாம் 5 ம் பிரிவிற் காட்டிய கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்சொல்லிய பொருத்தங்களை சரியாய் நிறைவேற்றப்பட்டாலன்றி, யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்பட மாட்டாது.

10. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாவற்றையும் ஏற்க அல்லது நியாயம் சொல்லாது தள்ளிவிடும் முழு உரித்தும் கவண்மேந்துக்கு உண்டு.

ஏ. ரீ. டைக்ஸ்,
கவண்மேந்து ஏசண்டுக்காக.

யாழ்ப்பாணம் கச்சேரி,
1910 ம் ௵ தை ௴ 25 ந் தேதி.

[Tender for sale of Mutton, Local Board, Nawalapitiya.]

பெப்ருவரி 1910 ம் வருஷம் முழுவதற்கும் நாவலப்பிட்டி லோக்கல்போர்ட்டைச்சேர்ந்த ஆட்டிறைச்சிக் கடைகள், இரண்டிலேயும், ஆட்டிறைச்சி இருத்தல் (1) ஒன்று என்ன விலை விற்கக் கூடுமென்றும் எவ்வகையான இறைச்சி ஒவ்வொரு கடையில் வைத்து விற்கப் பொருத்தம் எடுத்துக்கொள்ள சம்மதப்படுகின்ற தற்காஸ்துக்காரர்கள் தங்களுடைய தற்காஸ்துகளை கண்டி கச்சேரிக்கு இந்த மாசம் 12 ந் தேதி முற்பகல் வரையில் அனுப்பப்பட அங்கீகாரம் பண்ணப்படும்.

மேற்படி அனுப்பப்படும் தற்காஸ்துகளில் ஒன்றை யாவது எல்லா தற்காஸ்துகளையாவது தள்ளிப்போட அல்லது எந்த தற்காஸ்துகளையும் தெரிந்து ஏற்றுக் கொள்ள லோக்கல்போர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

கட்டளைப்படி,
மார்க் ஹவிம்,
ஸிகிரர்.

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

### தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்.

[M. P. S. W. Gooneratne.]

களுத்துறை டிஸ்திரிக்கைச்சேர்ந்த பாணந்துறையில் தல்ஹுரிவிருக்கும் எம். பீற்றர் சல்காது விஜயசேகர குணரத்ன என்கிற நான் 1907 ம் ஆண்டு மூன்றாம் இலக்கச்சட்டத்தின் எட்டாம் பிரிவின்படி மாத்தறை டிஸ்திரிக்கில் சிங்களப்பாஷையில் பிரசித்த நொத்தாரிஸாக வேலைபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்று முதல் மூன்று மாசத்தின்பின் பதிவுகர்த்தோர் ஜெனரலவர்களிடம் உத்தரவுகேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

எம். பீ. எஸ். டபிள்யு. குணரத்ன.

பாணந்துறை, தல்ஹுரி,
1910 ம் ஆண்டு ஜனவரிமீ 18 ந் தேதி.

[K. Juan Perera.]

அகுத்துக்கூர்கோறளே முகம்பத்துவே துடலவிருக்கும் கொடிகார ஆருச்சிகே ஜுவான் பிரேரு ஆகிய நான் 1907 1 ம் இலக்க சட்டத்தின்படி இன்று துவக்கம் மூன்று மாசம் சென்றபின் மாத்தறை டிஸ்திரிக்கு பிரசித்த நொத்தாரிஸ் வேலை செய்யும்படி கனம்பொருந்திய ரிஜிஸ்தரார் ஜெனரல்துரை அவர்கள் இடம் பெற்றுக்கொள்ள ஆயித்தத்துடன் இருப்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

கே. ஜுவான் பிரேரு.

துடல,
1910 ம் ஆண்டு பெப்ரவரிமீ 1 ந் உ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.